2. தகவல் கோரல்—தொடர்ச்சி.

(எ) எதிர்கட்சியைச் சேர்ந்த முன்னால் சட்டமன்ற உறுப்பினர்கள், தொண்டர்கள் கைது செய்யப்பட்டுள்ளது குறித்து.

திரு. எம். அப்துல் லத்தீப் : தலைவர் அவர்களே, கோயம்புத்தூரில் நடந்த அந்தக் கொலை குறித்து, ஹக்கீம் என்னும் திராவிட முன்னேற்றக் கழக இளைஞர் அணியைச் சேர்ந்த தோழர் கொலை செய்யப்பட்டதைக் குறித்து நான் கூட ஒரு ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்திருந்தேன். . . .

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, நேற்றைக்கும்கூட இப்படித்தான் விவாதம் நடந்தது. செய்தியே இப்போதுதான் கிடைத்திருக்கிறது. என்னிடத்திலே முழு விவரம் இல்லை. அதை முறைப்படி ஒத்திவைப்புத் தீர்மானமாக, முன்கூட்டியே உரிய நேரத்தில் கொடுத்தால், நாளைக்கு முறைப்படி எடுத்துக்கொண்டு விவாதிக்கப்படும்.

திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் : பேரவைத் தலைவர் அவர்களே, ஹக்கீம் அவர்கள் கொலை செய்யப்பட்டது சம்பந்தமாக ஆர். எஸ். எஸ். தோழர்கள் கைது செய்யப்பட்டால் அதில் எனக்கு எந்தவிதமான ஆட்சேபணையும் கிடையாது. கைது செய்யப்பட்ட கலைச்சோலை மணி என்பவருக்கும் ஆர். எஸ். எஸ்.க்கும் எந்தத் தொடர்பும் இல்லை. அவர் நகர காங்கிரஸ் கமிட்டியினுடைய செயலாளர். வீட்டிலே படுத்து உறங்கிக் கொண்டு இருந்த நேரத்தில் அவர் கைதுசெய்யப்பட்டிருக்கிறார். நிச்சயமாக அவருக்கும் இந்த இயக்கத்திற்கும் சம்பந்தம் கிடையாது. எனவே அதை எழுப்புகிறேன். . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நாளைக்கு இது தொடர்பான ஒத்திவைப்புத் தீர்மானம் எடுத்துக் கொள்ளப்படுகிறபோது உரியவர்கள் அதைப் பற்றிப் பேசலாம்.

4. கவன ஈர்ப்பு.

நெய்வேலி இரண்டாவது சுரங்கம் வெட்டும் பணியினால் வீடு, நிலம் இழந்தவர்களுக்கு நிவாரண அளிக்க வேண்டியதன் அவசியம் குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருவாளர்கள் இ. புகழேந்தி, ஏ. கணேசமூர்த்தி, மு. இராமநாதன், டாக்டர் கோ. நந்தகோபாலகிருட்டிணன், சி. கோவிந்தராஜன், மற்றும் கோ. பூவராகன் ஆகியோர் ஒரே பொருள் குறித்துக் கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்துள்ளனர். அவர்களில் ஒருவர் மாண்புமிகு முதலமைச்சரின் கவனத்திற்கு அதைக் கொண்டு வருவார். திரு. ஏ. கணேசமூர்த்தி.

[திரு. இ. புகழேந்தி] [1989 ஏப்ரல் 4

மாண்புமிகு முதல்வர் அவர்கள் அந்த மக்களுடைய பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காக ஆவன செய்வதாக, 'சொன்னதைச் செய்வோம்' என்ற நிலைப்பாட்டிற்கேற்ப இங்கே சொல்லியிருப்பதற்குப் பாராட்டினையும், நன்றியினையும் தெரிவித்துக்கொண்டு வெகு விரைவில் ஓய்வுபெறக்கூடியோர் அந்த என்.எல்.சி.கார்ப்பரேஷனில் 3,000 பேர்களுக்கு மேல் இருப்பதாக தெரிய வருகிறது. அந்த 3,000 பேர்களுக்கு மேல் ஓய்வு பெறக்கூடிய சூழ்நிலை இருக்கிற நிலையில் இன்றைக்கே அந்தப் பணிகளுக்கான ஆட்களைத் தேர்வு செய்கின்ற நிலையில் வீட்டினுடைய உரிமையாளர்கள். நிலத்தினுடைய உரிமையாளர்கள் ஆகியோர்களுக்கு முன்னுரிமையினை, தகுதி அடிப்படையிலே கொடுத்து, அவர்களைத் தேர்வு செய்து வைத்துக்கொள்கின்ற ஒரு நிலை ஏற்படுமேயானால், அந்த மக்களுடைய மனநிலையில் மிகப்பெரிய மகிழ்ச்சி நிலை ஏற்படுவதற்கு வாய்ப்பிருக்கிறது. அந்த நிலையினை அரசு தன்னுடைய ஆலோசனையில் வைத்துக் கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 10-40)

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, ஏற்கெனவே அளித்த உறுதியின் அடிப்படையில் காலி செய்யப்படும் குடும்பங்களுக்கு உடனடியாக மாற்று மனை கொடுக்கவும், வேலை வாய்ப்புகளை அவர்களுக்குப் பெற்றுத் தரவும் நிவாரணங்கள் வழங்கவும் தொடர்ந்து நிர்வாகத்திடம் பேச்சு வார்த்தை நடத்துமாறு மாவட்ட ஆட்சித் தலைவர் கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கிறார். அவரும் அந்தப் பணியை இப்போது செய்து வருகிறார். விரைவில் அரசு இதிலே தீவிர கவனம் செலுத்தி அந்த மக்களுக்குப் பாதுகாப்பு அளிக்க முன்வரும் என்பதை மீண்டும், மீண்டும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்த அலுவல், 1989-90ஆம் ஆண்டுக்கான மானியக் கோரிக்கைகள் மீது விவாதமும் வாக்கெடுப்பும்.....

2. தகவல் கோரல்—தொடர்ச்சி.

(எ) எதிர்க்கட்சியைச் சேர்ந்த முன்னாள் சட்ட மன்ற உறுப்பினர்கள் தொண்டர்கள் கைது செய்யப்பட்டுள்ளது குறித்து—தொடர்ச்சி.

*திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஜனநாயகத்தில் ஊர்வலங்களும், உண்ணாவிரதங்களும் அனுமதிக்கப்பட்ட முறைகள். நேற்று மதுரையில் முன்னாள் சட்ட மன்ற உறுப்பினர் சேடப்பட்டி முத்தையா, திரு. ஐக்கையன் முன்னாள் எம். பி., முன்னாள் எம்.எல்.ஏ.க்கள் போடி ராமதாஸ், சுப்பிரமணியம் ஆகியோர்களோடு இன்னும்

1989 ஏப்ரல் 4] [திரு. எஸ். திருநாவுக்கரசு]

500 பேர் கைது செய்யப்பட்டு இருக்கிறார்கள் என்பதை அரசினுடைய கவனத்திற்கு நான் கொண்டு வருகிறேன். இந்த கைதுகள் தொடராமல் இருக்க வேண்டும் என்று நான் இந்த அரசைக் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல் 25ஆம் தேதி சட்டமன்றத்தில் நடைபெற்ற வன்முறை சம்பவங்களையொட்டி நாங்கள் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் குறிப்பிட்டதைப் போல அதற்குப் பொறுப்பு ஏற்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ராஜினாமா செய்யவேண்டும் என்பதை வலியுறுத்தி அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் வெளிநடப்புச் செய்கிறது.

(அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் வெளிநடப்புச் செய்தனர்.)

5. விதி 110-இன் கீழ் முதலமைச்சரின் அறிக்கை.

சென்னையில் வீட்டு வசதி வாரிய மனை ஒதுக்கீடு, அடுக்கு மாடிக் கட்டிட அனுமதி ஆகியவற்றில் நடைபெற்ற முறைகேடுகள் குறித்து.

*மாண்புமிகு பேரவைத் தலைவர்: 110-வது விதியின்கீழ் பொது முக்கியத்துவம் வாய்ந்த ஒரு பொருளைப் பற்றி மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஓர் அறிக்கையைப் படைப்பார்கள்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வீட்டு வசதித் துறை எம்.எம்.டி.ஏ., விதிகளை மீறி அனுமதி வழங்கியதில் உள்ள ஒழுங்கீனங்களைப் பற்றிய அறிவிப்பு: சென்னை நகரத்தில் புதிய கட்டிடங்கள் கட்டுவதற்குத் தேவையான அனுமதிகளை வழங்குவதில் 1986-87 ஆம் ஆண்டுகளில் அதிக அளவுக்கு முறைகேடுகள் நடந்துள்ளன என்றும், மக்களின் பாதுகாப்பிற்கும், நல்வாழ்விற்கும் தேவையான அடிப்படை வசதிகள் பற்றிய சட்ட விதிகளைத் (எம்.எம். டி.ஏ. ரூல்ஸ்) தளர்த்தி பலருக்கு முறைகேடான அனுமதிகளை அன்றைய அந்தத் துறையின் அமைச்சர் வழங்கியுள்ளார் என்றும், கட்டிட விதிகளை ஒழுங்குபடுத்தும் பொறுப்பினை ஏற்றுள்ள சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் (எம்.எம். டி.ஏ.) மற்றும், அரசு செயலாளர் பரிந்துரை செய்யாமல் ஆட்சேபணை தெரிவித்த பலஅடுக்குமாடிக்கட்டிடங்களுக்கு அமைச்சர் தன்னிச்சையாக எந்தக் காரணமும் இன்றி விதிகளைத் தளர்த்தி அனுமதி தந்து உத்தரவிட்டுள்ளார் என்றும் (கூச்சல்-குழப்பம்).

திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசாங்கத்தின் சார்பில் அறிவிப்பு........(கூச்சல்-குழப்பம்).